06.08.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### வேளாண் துறை விதை நெல்லை பயன்படுத்த அழைப்பு

காரைக்காலில் வேளாண் துறை சார்பில் விதை நெல் விற்பனை வியாழக்கிழமை தொடங்கப்பட்டது. சான்றுடன் கூடிய இந்த நெல்லை விவசாயிகள் வாங்கி பயன்பெற அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்டம், மாதூரில் உள்ள விதைப் பண்ணையில் புதுச்சேரி அரசின் வேளாண் துறை சார்பில் விதை நெல் விற்பனை தொடங்கப்பட்டது. கூடுதல் வேளாண் இயக்குநர் கா.மதியழகன் விற்பனையைத் தொடங்கிவைத்துப் பேசியது:

மாதூர் விதைப் பண்ணையில் இனத்தூய்மை, புறத்தூய்மை,நல்ல வீரியமும், முளைப்புத் திறனுமுடைய விதை உற்பத்தி கடந்த 56 ஆண்டுகளாக செய்யப்படுகிறது. நடப்பு சம்பா, தாளடி பட்டத்திற்கேற்ற நெல் ரகங்கள், சான்றளிக்கப்பட்டு நேரடி விற்பனைக்குத் தயாராக உள்ளன.

சாவித்திரி, காரைக்கால்-1 நெல் ரகங்களின் ஆதார நிலை கிலோ ஒன்றுக்கு ரூ.36, மேம்படுத்தப்பட்ட வெள்ளைப் பொன்னி சான்று நிலை விதை ரூ.29, ஆடுதுறை-38, 39, 46 ஆகியவை ரூ.22 என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

இதுதவிர ஆடுதுறை -50 என்ற புதிய ரகமும் போதுமானஅளவு உற்பத்தி செய்து, ஆதார நிலை விதை ரூ.37-க்கும், சான்று நிலை விதை ரூ.22-க்கும் விற்பனை செய்யப்படுகிறது. காரைக்கால் பகுதி விவசாயிகள் இந்த வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றார். நிகழ்ச்சியில் வேளாண் இணை இயக்குநர் ந.ராஜேந்திரன், துணை இயக்குநர் ஜெ.செந்தில்குமார் வேளாண் அலுவலர் கே.மகேந்திரன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

புதிய ரகமான ஆடுதுறை -50 குறித்து வேளாண் துறையினர் கூறியது:

ஆந்திரா பொன்னி, சாவித்திரி ஆகிய ரகங்களைக் கொண்டு ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டுள்ளதால், அவ்விரு ரகங்களின் நல்ல குணங்களைப் பெற்றுள்ளது. இதன் வயது 150 நாள். காரைக்கால் மாவட்டத்தில் ஆகஸ்ட் மாதம் விதைப்பதற்கு ஏற்ற ரகமாகும். பயிர் உயரமாக வளரும், இலை சுருட்டுப் புழுவிற்கு எதிர்ப்பு சக்தியும், தண்டு துளைப்பான் பூச்சிக்கு ஓரளவு எதிர்ப்பு சக்தியும் உண்டு.

ஒரு ஹெக்டேருக்கு 10 டன் விளைச்சல் திறனுடைய ஆடுதுறை -50 நெல் ரகத்தின் சராசரி மகசூல் 6 டன் ஆகும். வைக்கோல் உற்பத்தி அதிகமாக இருக்கும் என்றனர்.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### சின்ன வெங்காயம் விலை திடீரென அதிகரிப்பு

ஒட்டன்சத்திரம், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டில் சின்ன வெங்காயம் விலை நேற்று திடீரென அதிகரித்து கிலோ ரூ.30க்கு விற்றது. ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு ஆடிப்
பெருக்கை முன்னிட்டு விடுமுறை அளிக்கப்பட்டிருந்தது. நேற்று காலை வழக்கம் போல் செயல்பட தொடங்கியது. காலையில் சின்ன வெங்காயம் மட்டுமே ஏலம் விடப்படுவது வழக்கம். ஆனால் நேற்று எதிர்பார்த்தபடி சின்ன வெங்காயம் வரத்து காணப்படவில்லை.
மூன்றில் இரண்டு பங்கு அளவிற்கே வரத்து இருந்தது. இதனால் விலை கிலோவிற்கு ரூ.8 வரை அதிகரித்தது. நேற்று மார்க்கெட்டிற்கு கொண்டு வரப்பட்ட புதிய சின்ன வெங்காயத்தின் அதிகபட்ச விலை ரூ.30 ஆகும். இதற்கு முன்பு அதிகபட்ச விலை ரூ.22 ஆக இருந்தது.

கமிஷன் கடைஉரிமையாளர் மூர்த்தி கூறுகையில், “ஆடிப்பெருக்கு, அடி அமாவாசை, குருபெயர்ச்சி காரணமாக விவசாயிகள் வெளியூர்களுக்கு சென்று விட்டதால், செவ்வாயன்று வெங்காயம் பறிக்கவில்லை. இதனால் வரத்து குறைவாக இருந்ததால் விலை ஏற்றம் அடைந்தது,” என்றார்.

## நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி

தேனி: தேனி சார்நிலை கருவூலம் எதிரே உள்ள தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் உழவர் பயிற்சி மையத்தில் வரும் 9,10ம் தேதிகளில் இலவச நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி நடைபெற உள்ளது. இதில் கலந்து கொள்ள விருப்பம் உள்ளவர்கள் 94431 08832, 99620 75873 என்ற அலைபேசியில் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து கொள்ளலாம் என, பயிற்சி மைய தலைவர் முருகேசன் தெரிவித்துள்ளார்.

## பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி: 50 சதவீத மானியம் வழங்கல்

சேந்தமங்கலம்: தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியம் வழங்கப்படுகிறது.

தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தில், மண் வளத்தை அதிகரிக்க பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து, 50 சதவீதம் பூக்கும் நிலையில், மடக்கி உழவு செய்யும் விவசாயிகளுக்கு, பின்னேற்பு மானியமாக, செலவில், 50 சதவீதம் தொகை வழங்கப்படுகிறது. பசுந்தாள் உர விதைக்கான விண்ணப்பத்தை, சம்பந்தப்பட்ட வேளாண் உதவி அலுவலர் மூலம், வேளாண் விரிவாக்க மையத்தில் வழங்க வேண்டும். அதை பரிசீலனை செய்து, 50 சதவீதம் தொகை விவசாயிகளின் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படும். ஒரு ஹெக்டேருக்கு, அதிக பட்சமாக, 1,500 ரூபாய், அல்லது 50 சதவீதம் மானியம் வழங்கப்படும். ஒரு விவசாயி, இரண்டு ?ஹக்டேருக்கு மானியம் பெறும் தகுதி உடையவர்.

இதுகுறித்து, சேந்தமங்கலம் வேளாண் உதவி இயக்குனர் தங்கராஜு கூறியதாவது: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தில், பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு, 50 சதவீதம் மானியமாக வழங்கப்படுகிறது. தற்போது, பசுந்தாள் உரப்பயிர் சாகுபடி செய்ய உகந்த பருவம். சேந்தமங்கலம் வட்டார விவசாயிகள், முன்பதிவு செய்து, இத்திட்டத்தில் மானியம் பெற்று பயன்பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

**நிலக்கடி நீரை உறிஞ்சுவகால் குறையும் மண்வளம் : அழகப்பா இன்ஜி., கல்லூரி கருத்தரங்கில் தகவல்**

காரைக்குடி, :நிலத்தடி நீரை உறிஞ்சுவதால் மண்வளம் குறைந்து வருவதாக காரைக்குடி அமகப்பா இன்ஜி., கல்லூரியில் நடந்த கருத்தரங்கில் தெரிவிக்கப்பட்டது.

காரைக்குடி அழகப்பா இன்ஜி., கல்லூரி சிவில் துறை சார்பில், தொழில் நுட்ப கல்வி கர மேம்பாடு (டெக்கியூப்) கிட்டக்கின் கீழ்' மண்ணின் கரக்கை மேம்படுத்துவதற்குரிய கருத்தரங்கை முதல்வர் ராஜ்குமார் தொடங்கி வைத்தார். புவி நுட்ப பொறியியல் துறை பேராசிரியர்கள் அருமைராஜ், முத்தாரம், ஸ்கீபா நிறுவன ஆலோசகர் சின்னா ரத்தினவேல் பேசியதாவது: வீடுகட்ட மண்ணின் தாங்கும் திறன் ஒரு சதுர மீட்டருக்கு 25 டன் என்ற அளவில் இருக்க வேண்டும். செம்மண் தரையில் இது 25 முதல் 30 டன்னாகவும், பாறை பகுதியில் 40 முதல் 50 டன்னாகவும் உள்ளது. களிமண்ணின் தாங்கும் திறன் 10 டன்னுக்கும் கீழே உள்ளது.

இடப்பற்றாக்குறையால் தற்போது விவசாய நிலங்கள் வீட்டு மனைகளாக மாறி வருகிறது. விவசாய நிலங்கள் களிமண் கலந்த நிலப்பரப்பை கொண்டது. இதனால், கட்டப்படும் கட்டடங்கள் நீண்ட காலத்துக்கு உழைக்காமல், விரிசல் ஏற்படுகிறது. எனவே, களிமண் நிலப்பரப்பில் கட்டடம் கட்டும்போது, அதற்கேற்ப முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியது அவசியம். கற்போது களிமண் நிலப்பரப்பில் கட்டடக்கின் எடைக்கு ஏற்ப பூமிக்கடியில் பில்லர் அமைத்து கட்டடம் கட்டப்படுகிறது. பூமிக்கடியில் பில்லர் அமைக்கும்போது அதில் வெற்றிடம் ஏற்பட்டால், நாளடைவில் அந்த வெற்றிடம் அமுக்கக்கால் நிரம்பும்போது கட்டடம் சேதத்துக்குள்ளாகிறது. இதை தவிர்க்க களிமண் நிலப்பரப்பில் மண் தூண் அமைக்கும் நடைமுறை தற்போது அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, கட்டடம் கட்டும் பரப்பில் ஆழ்துளை குழி அமைத்து அதில் உள்ள களிமண்ணை வெளியே எடுத்து, அந்த வெற்றிடத்தில் கிராவல் மண், சுண்ணாம்பு, செம்மண் மற்றும் தாங்கும் கிறன் கொண்ட மண் வகைகளை நிரப்ப வேண்டும். அழுத்தத்தால் களிமண் விரிவடையும்போது இந்த மண் துகள்கள் வெற்றிடத்தை

ஏற்று அதிக அழுத்தம் ஏற்படாதவாறு பார்த்து கொள்ளும். இதற்கு மண் தூண் என்று பெயர். பில்லருக்கு ஆகும் செலவில் 50 சதவீகம் குறைவு. அடுத்ததாக களிமண் பரப்பில் கட்டடத்தின் எடைக்கு ஈடான எடை கொண்ட அழுத்தமுள்ள பொருளை வைத்து, சுமார் ஓராண்டு வரை அந்த நிலப்பரப்பு கெட்டியாகும்படி செய்ய வேண்டும். அதன்பிறகு அதில் கட்டடம் கட்டலாம். இரும்பு, பைபர், பாலிமரிலான வலைகளை நிலப்பரப்பினுள் போட்டு அகன்மேல் கட்டடத்தை கட்ட வேண்டும். கட்டடத்தின் அழுத்தத்தை இந்த வலைகள் தாங்கி கொள்ளும்.

அஸ்திவாரம் அமைக்க மொத்த பட்ஜெட்டில் 30 சதவீகம் செலவழிகிறது. நவீன முறைகளை பயன்படுத்தும்போது இகன் செலவு பாதியாக குறையும். கட்டடங்களை கட்டும்போது கண்டிப்பாக மண்ணின் தன்மை குறித்து ஆய்வு செய்ய வேண்டும். பெருகி வரும் கழிவுகளாலும், நிலக்கடி நீரை அளவுக்கு அதிகமாக உறிஞ்சுவதாலும் மண்ணின் தன்மை அதன் தாங்கும் திறனை இழந்து வருகிறது, என்றார். ஏற்பாடுகளை ஒருங்கிணைப்பாளர் ஜெயந்தி, பவுலின் செய்திருந்தனர்.

**புதிய பயிர் காப்பீடு திட்ட விழிப்புணர்வு முகாம்**

பாப்பாரப்பட்டி: பாப்பாரப்பட்டி வேளாண்மை அறிவியல் நிலையத்தில், புதிய பயிர் காப்பீடு திட்ட விழிப்புணர்வு முகாம் நடந்தது. மாவட்ட பஞ்., குழு தலைவர் நாகராஜன் தலைமை வகித்து, புதிய பயிர் காப்பீடு திட்ட விழிப்புணர்வு கையேட்டை வெளியிட்டார். புதிய பயிர் காப்பீடு திட்டத்தின் மூலம் விவசாயிகளுக்கு கிடைக்கும் பயன்கள் குறித்து, முன்னோடி வங்கி மேலாளர் முத்தரசு, நபார்டு வங்கியின் மாவட்ட முன்னேற்ற மேலாளர் பார்த்தசாரதி ஆகியோர் விளக்கினர். வேளாண்மை இணை இயக்குனர் ராஜேந்திரன், புதிய பயிர் காப்பீடு திட்டத்தில், விவசாயிகள் செலுத்த வேண்டிய காப்பீட்டுத்தொகை குறைக்கப்பட்டுள்ளது குறித்தும், காப்பீடு தொகை விரைவில் கிடைக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கை குறித்தும் பேசினார். வேளாண் அறிவியல் நிலையை திட்ட ஒருங்கிணைப்பாளர் சண்முகம், தோட்டக்கலைத்துறை துணை இயக்குனர் அண்ணாமலை உட்பட பலர் பங்கேற்றனர்.

இன்றைய வேளாண் செய்திகள்

## 22 மாநிலங்களில் பயிர்காப்பீடு



புதுடெல்லி : காரிப் பருவத்துக்கான, பிரதமரின் புதிய பயிர்க்காப்பீடு திட்டத்தை 22 மாநிலங்கள் செயல்படுத்தியுள்ளன. இந்த திட்டத்தில் சேர கடைசி தேதி ஜூலை 31ம் தேதியில் இருந்து இந்த மாதம் 10ம் தேதி வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. அதற்குள் கடந்த ஆண்டை விட காப்பீடு எண்ணிக்கை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை உள்ளது. இதுவரை இல்லாத குறைந்த அளவாக, காப்பீடு பிரீமியம் ரபி பருவத்துக்கு 1.5 சதவீதமாகவும், காரிப் பருவத்துக்கு 5 சதவீதமாகவும் இருக்கிறது என மாநிலங்களவையில் விவசாயத்துறை அமைச்சர் ராதாமோகன் சிங் தெரிவித்துள்ளார்.

## பூண்டு கிலோ ரூ.210க்கு விற்பனை

கோவை, : கோவையில் எம்.ஜி.ஆர்.,மொத்த காய்கறி மார்க்கெட்டிற்கு நாட்டு பூண்டு, ஊட்டி பூண்டு, இமாசல பிரதேச பூண்டு மற்றும் சீனாவில் இருந்து இறக்குமதி பூண்டு ஆகியவை விற்பனைக்கு வருகிறது. இந்நிலையில் கடந்த ஒரு மாதமாக இமாசலத்தில் இருந்து பூண்டு வருவதும் குறைந்தது. சீனா பூண்டு ஓரளவு விற்பனைக்கு வருகிறது. இதனால் பூண்டுக்கு கிராக்கி ஏற்பட்டுள்ளது. மொத்த மார்க்கெட்டில் கடந்த மாதம் ரூ.115க்கு விற்ற பூண்டு படிப்படியாக உயர்ந்து தற்போது ரூ.152க்கு விற்கப்படுகிறது. சில்லரை விற்பனை கடைகளில் ரூ.210 வரையும் விற்கப்படுகிறது.

## ஆக.9, 10ல் நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம்

திருப்பூர், : நாட்டுக்கோழி வளர்ப்பு பயிற்சி முகாம் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் திருப்பூரில் நடக்கிறது. இதுகுறித்து, திருப்பூர் கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மைய உதவி பேராசிரியர் அர்த்தனாரி ஈஸ்வரன் கூறியுள்ளதாவது: திருப்பூர் பழைய பஸ் நிலையம் எதிரில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும் 9 மற்றும் 10ம் தேதிகளில் நாட்டுக்கோழி வளர்ப்பு இலவச பயிற்சி முகாம் காலை 10.30 முதல் மாலை 4 மணி வரை நடைபெற உள்ளது. இதில், திருப்பூர் மற்றும் சுற்றுப்புற வட்டார விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெறலாம். இவ்வாறு கூறியுள்ளார்.

## மேராக்காய் விலை சரிவு

குன்னூர், : நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலைத்தோட்ட காய்கறி விவசாயம் அதிகளவில் மேற்கொள்ளப்படுகிறது. முட்டை கோஸ், முள்ளங்கி, உருளைக்கிழங்கு, கேரட், பீட்ரூட், நூல்கோள், பீன்ஸ், காலிபிளவர் உள்ளிட்ட பல்வேறு வகைகளான காய்கறிகள் பயரிடப்பட்டு உள்ளூர் மட்டுமல்லாமல் வெளிமாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. தற்போது இடுபொருட்கள் விலை உயர்வு மற்றும் காய்கறிகளின் விதைகளில் விலை உயர்வு காரணமாக பெரும்பாலான விவசாயிகள் இத்தொழிலில் அதிக ஆர்வம் காட்டுவது இல்லை. இதனிடையே குன்னூர் அருகே தூதூர்மட்டம், கொலக்கம்பை, கிளிஞ்சடா, கரும்பாலம்,

காசோலை, டெரேமியா, நாக்குநேரி உள்ளிட்ட பகுதிகளில் குறைந்த முதலீட்டில் கூடுதல் லாபம் கிடைக்கும் மேராக்காய் பயிரை நம்பி விவசாயிகள் நூற்றுக்கணக்கான பரப்பளவில் இதனை பயிரிடப்பட்டுள்ளனர். இந்த விவசாயத்திற்கு பந்தல்கள் அமைக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வருகிறது. வாரந்தோறும் பந்தல் ஒன்றுக்கு ரூ.1,000 முதல் ரூ.5,000 வரை வருமானம் கிடைக்கிறது. இதனால் கோவை, ஊட்டி, மேட்டுப்பாளையம் ஆகிய பகுதிகளிலுள்ள காய்கறி மண்டிகளில் சாதாரண ரகத்திற்கு ரூ.8, பாலிஸ் ரகத்திற்கு ரூ.15 வரை விலை கிடைத்து வருகிறது. இதனால் விவசாயிகள் மத்தியில் கவலை ஏற்பட்டுள்ளது.

## தேயிலை நாற்று உற்பத்தி துவக்கம்

வால்பாறை, : வால்பாறை பகுதியில் தொடர்ந்து குளிர்ச்சி நிலவுவதால் தேயிலை செடி நாற்று உற்பத்தியில் எஸ்டேட் நிர்வாகங்கள் இறங்கி உள்ளன. கோவை மாவட்டம் வால்பாறையில் அமைந்துள்ள தென்னிந்தியாவின் தேயிலை ஆராய்ச்சி நிலையமான உபாசி வெளியிட்டுள்ள தகவலில், தேயிலையில் உலக நாடுகளின் போட்டியை சமாளிக்க தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள் மற்றும் விவசாயிகள் புதிய தேயிலை நாற்றுகளை நட்டு அதிக தரம் வாய்ந்த தேயிலையை உற்பத்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக்கொண்டுள்ளது. புதிய நாற்றுகளை பயிரிட்டால் மத்திய அரசு மானியம் வழங்குகிறது. எனவே பெரும்பாலான தேயிலைத் தோட்ட நிர்வாகங்கள் பழைய தேயிலை செடிகளை அடியோடு பிடுங்கி விட்டு புதிய தேயிலை நாற்றுகளை நடவு செய்து வருகின்றன. புதிய நாற்றுகள் அதிக அளவில் தேவைப்படுவதால் நர்சரியில் கட்டிங் முறையில் நாற்று உற்பத்தி விறுவிறுப்படைந்துள்ளது.

## திருச்சி மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் வாடகை மையம் அமைக்க மானியம்

திருச்சி,:திருச்சி மாவட்டத்தில் வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டத்திற்கான அரசு ஆணை விரைவில் பெறப்பட உள்ளதால் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. இது குறித்து வேளாண் துறை செயற்பொறியாளர்கள் கூறுகையில், திருச்சி மாவட்டத்தில் 5 குதிரை சக்தி கொண்ட சோலார் பம்ப் அமைக்கும் திட்டத்தின் கீழ், நடப்பு நிதியாண்டில் 80 சதவீத மானியத்தில் 23 எண்கள் அமைக்க ஆணை பெறப்பட்டு வேலை உத்தரவு வழங் கப்பட்டுள்ளது. மாவட்டத்தில் இதுவரை மொத்தம் 67 விவசாயிகளுக்கு

ரூ.2.30கோடி மானி யத்தில் சோலார் பம்ப்புகள் அமைத்து தரப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டுக்கு 5 குதிரை திறன் கொண்ட சோலார் பம்புகள் குழாய் கிணறு, திறந்த வெளி கிணறு மற்றும் தரைமட்ட தொட்டியில் இருந்து தண்ணீர் எடுக்கும் வகையில் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மேலும் 7.5 மற்றும் 10 குதிரை திறன் கொண்ட சோலார் பம்ப்புகள் குழாய் கிணறுகளில் பொருத்தும் வகையிலும் அமைக்க விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. சூரிய சக்தி மூலம் செயல்படும் சோலார் உலர்த்திகளில் வாழைப்பழம், மஞ்சள், வெங் காயம், காய்கறிகள், பழங்கள், வாசனை பொருட்கள், மூலிகை பொருட்கள் என அனைத்து பொருட்களையும் அதன் உயிர் சத்து வீணாகாமல், சேதங்களை தவிர்த்து மதிப்பு கூட்டப் பட்ட பொருளாக தரம் உயர்த்தலாம். 600 சதுர அடி பரப்பில் உள்ள உலர்த்திக்கு ரூ.3லட்சம் வரை மானியம் வழங்கப்படுகிறது. தனிப்பட்ட விவசாயிகள் அல்லது விவசாய குழுவினர் இத்திட்டத்தில் பயன் பெறலாம்.

நடப்பு ஆண்டில் 2 எண்கள் சோலார் உலர்த்திகள் அமைக்கப்பட உள்ளது. வேளாண் இயந் திரங்கள் மற்றும் கருவிகளை சிறு, குறு விவசாயிகள் சொந்தமாக வாங்க இயலாத நிலையில் நியாயமான வாடகையில் அனைவருக்கும் பயன்படுத்தும் வகையில் ஒவ்வொரு வட்டாரத் திலும் வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாடகை மையம் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒரு வாடகை மையம் அமைக்க ஆகும் உத்தேச மதிப்பீட்டு தொகை ரூ.25லட்சத்தில் அதிக பட்சமாக 40 சதவீதம் ெதாகை அல்லது ரூ.10லட்சம் வரை மானியமாக வழங்கப் படுகிறது. இதுவரை அந்தநல்லூர், லால்குடி, மண்ணச்சநல்லூர், முசிறி மற்றும் உப்பிலியபுரம் ஆகிய 5 வட்டாரங்களில் இவை அமைக்கப்பட்டுள்ளது. மீதம் உள்ள 9 ஒன்றியங்களில் வாடகை மைய ங்கள் அமைக்க விவசாய குழு, தொழில் முனைவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. வேளாண் இயந்திரங்கள், கருவிகள் மானியத்தில் வழங்கும் திட்டத்திற்கான அரசு ஆணை விரைவில் பெறப்பட உள்ளது. விருப்பமுள்ள விவசாயிகள் தேவைப்படும் இயந்திரங்கள், கருவிகளுக்கான விண்ணப்பங்கள் அளிக்கலாம் என்றனர்.

## கரூர் பகுதியில் எள் அறுவடை மும்முரம்

கரூர், : கரூர் பகுதியில் எள் அறுவடை பணி மும்முரமாக நடந்து வருகிறது. கரூர் வட்டாரத்தில் குறைந்த நீரில் சாகுபடியாகும் துவரம் பருப்பு, எள், கேழ்வரகு, சோளம் பயிரிடப்பட்டுள்ளது. இதில் கோயம்பள்ளி, சோமூர், நெரூர், வாங்கல் பகுதி விவசாயிகள் எள் ஓரளவு சாகுபடி செய்திருந்தனர். தற்போது எள் அறுவடை பணி மும்முரமாக நடந்து வருகிறது. எள் செடிகளை பிடுங்கி காய வைத்து, நன்கு காய்ந்த பிறகு தரம் பிரித்து எள்ளை விற்பனைக்காக அனுப்பி வைக்கின்றனர். நிலத்தடி நீர் முன்பு அதிகம் இருந்ததால் எள் அதிக பரப்பளவில் சாகுபடியானது. தற்போது நிலத்தடி நீர் குறைந்துவிட்டதால், எள் செடியில் இந்த ஆண்டு பூச்சி தாக்குதலினால் விளைச்சல் குறைந்தது. மேலும், விவசாய வேலைக்கு ஆட்கள் கிடைக்காமல் பிரச்னையாக உள்ளது. வேளாண் துறையினர் மானாவாரி நிலங்களில் எள் போன்றவற்றை பயிரிடுவதற்கு உதவி செய்ய தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கொட்டையூரில் பருத்தி ஏலம் 1,230 குவிண்டால் பஞ்சு விற்பனைக்கு வந்தது

கும்பகோணம், : கும்பகோணம் அடுத்த கொட்டையூரில் உள்ள வேளாண்மை ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி மறை முக ஏலம் நேற்று முன்தினம் நடைபெற்றது.திருவிடைமருதூர், திருமாந்துறை, இன்னம்பூர், ஆரியப்படையூர், பம்பப்படையூர், தியாகசமுத்திரம், துக்காச்சி, திருப்பந்துறை, ஓலைப்பாடி உள்ளிட்ட பகுதிகளிருந்து 1000க்கும் மேற்பட்ட பருத்தி விவசாயிகள் 1,650 உருப்படிகள் 1,230 குவிண்டால் (123 டன்) எடையுள்ள பருத்தியை மறைமுக ஏலத்திற்கு கொண்டு வந்தனர். விழுப்புரம், திருப்பூர், கும்பகோணம், செம்பனார்கோவில் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 10க்கு மேற்பட்ட வியாபாரிகள் ஏலத்தில் கலந்து கொண்டனர். மறைமுக ஏலத்தில் விவசாயிகள் கொண்டு வந்த பருத்திக்கு வியாபாரிகள் விலை நிர்ணயித்தனர். நிர்ணயித்த விலையை கும்பகோணம் வேளாண் விற்பனை குழு அலுவலக கண்காணிப்பாளர் ப்ரியாமாலினியிடம் வழங்கினர்.

இதில் இந்த வாரத்தில் சராசரியாக ஒரு குவிண்டாலுக்கு ரூ. 5500ம், அதிகப்பட்ச விலையாக ரூ. 5,869ம், குறைந்த பட்ச விலையாக ரூ.4,180ம் என விலை முடிவானது.

## குவிண்டால் பருத்தி ரூ.5,689க்கு கொள்முதல்

வலங்கைமான் : வலங்கைமான் ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் பருத்தி குவிண்டால் ஒன்றுக்கு அதிகபட்ச விலையாக ரூ.5,689க்கு கொள்முதல் செய்யப்பட்டது. வலங்கைமான் அடுத்த வெட்டாறு பாலம் அருகே உள்ள தனியார் நர்சிங் கல்லூரியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடம் தற்காலிகமாக செயல்பட்டு வருகிறது. இந்த ஒழுங்குமுறை விற்பனை கூடத்தில் நேற்று முன்தினம் பருத்தி மறைமுக ஏலம் நடந்தது. சித்தன்வாழூர், பாடகச்சேரி, செம்மங்குடி, லாயம், தில்லையம்பூர், சந்திரசேகரபுரம், ஆதிச்சமங்கலம், உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த 147 விவசாயிகள் பருத்தியை கொண்டு வந்தனர்.

ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர் உள்ளிட்ட பகுதிகளிலிருந்து 5 வியாபாரிகள் பங்கேற்றனர். திருவாரூர் மாவட்ட விற்பனைக்குழு செயலாளர் சேரநாதன் மற்றும் தனி அலுவலர் மனோகரன் தலைமையில் நடந்த ஏலத்தில் பருத்தி அதிகபட்ச விலையாக ரூ.5,689க்கும் குறைந்தபட்ச விலையாக ரூ.4,401க்கும், சராசரி விலையாக ரூ.5,323க்கும் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் நடந்த மறைமுக ஏலத்தின் மூலம் 208 குவிண்டால் ரூ.11,10,937க்கு கொள்முதல் செய்யபட்டது.

## மாதூர் அரசு விதைப்பண்ணையில் சம்பா, தாளடி விதை நெல் விற்பனை துவக்கம் கூடுதல் வேளாண் இயக்குனர் அறிவிப்பு

காரைக்கால் : காரைக்கால் மாதூர் வேளாண் அறிவியல் நிலையத்தின் அரசு விதை பண்ணையில் சம்பா, தாளடி விதை நெல் விற்பனை துவங்கியது. விதை நெல் விற்பனையை துவக்கி வைத்து மாவட்ட கூடுதல் வேளாண் இயக்குனர் மதியழகன் பேசியதாவது: புதுச்சேரி அரசின் வேளாண்துறை, மாதுரில் உள்ள அரசு விதை பண்ணையில் கடந்த 56 ஆண்டுகளாக காரைக்கால் மாவட்ட மண்ணுக்கு ஏற்ற பயிர் ரகங்களின் தரமான விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கி வருகிறது.

வருகிற சம்பா, தாளடி பட்டத்துக்கேற்ற நெல் ரகங்களின் சான்று விதைகள் மேற்கண்ட பண்ணையில் நேரடி விற்பனைக்கு தயார் நிலையில் உள்ளது. சாவித்திரி (சிஆர்1009), ஆதார நிலை விதை கிலோ ரூ.36, ஆடுதுறை- 38, ஆடுதுறை-39, ஆடுதுறை- 46, ஆதார நிலை விதை கிலோ ரூ.22, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னியின் ஆதார நிலை விதை கிலோ ரூ.29 மற்றும் ஆடுதுறை-50 ரக சான்று நிலை விதை கிலோ ரூ.37க்கு விற்பனை செய்யப்படுகிறது.

எனவே காரைக்கால் மாவட்ட விவசாயிகள், மாதூர் அரசு விதைப்பண்ணையை அணுகி தரமான விதைகளை பெற்று பயனடையலாம். மேலும், புதிய ரகமான ஆடுதுறை-50 ஆந்திரா பொன்னி, சாவித்திரி ஆகிய ரகங்களை கொண்டு ஒட்டு சேர்த்து உருவாக்கப்பட்டுள்ளதால் அவ்விரு ரகங்களின் நல்ல குணங்களை இந்த ஆடுதுறை- 50 பெற்றுள்ளது. இதன் வயது 150 நாட்களாகும். ஆகஸ்ட் மாதத்தில் விதப்பதற்கு மிகவும் ஏற்ற ரகமாகும். ஒரு ஹெக்டேருக்கு 10 டன் விளைச்சல் திறனுடைய ஆடுதுறை- 50 நெல் ரகத்தின் சராசரி மகசூல் 6 டன்னாகும். வைக்கோல் உற்பத்தியும் அதிகமாகும் என்றார். வேளாண் இணை இயக்குனர் ராஜேந்திரன், துணை இயக்குனர் செந்தில்குமார், வேளாண் அலுவலர் மகேந்திரன் பங்கேற்றனர்.

## அலங்காநல்லூர் விவசாயிகளுக்கு அரசு மானிய விதைநெல்

அலங்காநல்லூர், : அலங்காநல்லூர் வட்டார விவசாயிகள் பயன்பெறும் வகையில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் பல்வேறு அரசு மானியங்கள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன்படி இயந்திர நடவு முறையில் திருந்திய நெல்சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு ஹெக்டருக்கு ரூ.5 ஆயிரம் வீதமும், மண் வளத்தை பாதுகாக்கவும், ராசாயன உரங்களால் மண் வளம் பாதிக்கப்படுவதை தவிர்ப்பதற்காக பசுந்தாள் உரம் பயிரிட வலியுறுத்தப்படுகிறது. இதனை மடக்கி உழுவதற்காக ஒரு ஹெக்டருக்கு ரூ.1500 மானியம் வழங்கப்படுகிறது.

தற்போது என்.எல்.ஆர்.34449 மற்றும் கோ-51 ஆகிய விதைநெல் ரகங்கள் தேவையான அளவு இருப்பு உள்ளது. இந்த ரகங்களுக்கு அரசு மானியமாக கிலோ

ஒன்றுக்கு ரூ.10 வீதம் வழங்கப்படுகிறது. கூடுதல் விபரங்களுக்கு அலங்காநல்லூர் வட்டார வேளாண்மை விரிவாக்க மையத்தை தொடர்பு கொள்ளலாம் என வேளாண்மை உதவி இயக்குநர் விஜயலெட்சுமி கேட்டுக்கொண்டுள்ளார்

## ஒற்றை தலைவலி நீங்க சிறுதானியங்கள் சாப்பிடுங்க..! சித்த மருத்துவர் அறிவுரை

பழநி, : ஒற்றை தலைவலி நீங்க சிறுதானியங்கள் சாப்பிடலாமென சித்த மருத்துவர் மகேந்திரன் ஆலோசனை வழங்கி உள்ளார்.

அரிசி மற்றும் கோதுமையை விட சிறுதானியங்களில் அதிகளவு ஊட்டசத்து இருப்பதாக விஞ்ஞானபூர்வமாக நிரூபிக்கப்பட்டுள்ளது. சிறுதானியங்களில் புரதம், நார்ச்சத்து, நியாசின், தயமின் மற்றும் ரிபோபிளேவின் ஆகிய வைட்டமின்கள், இரும்புச்சத்து, மெக்னீசியம், கால்சியம் மற்றும் பொட்டாசியம் ஆகியவையும் அதிக அளவில் காணப்படுகின்றன. மேலும், சிறுதானியங்களில் உள்ள பைட்டிக் அமிலம் எனப்படும் தாவர ஊட்டச்சத்து மனித உடலில் உள்ள கொழுப்பின் அளவை குறைப்பதனால் புற்றுநோயினை வெகுவாக குறைக்கிறது. உடல் ஆரோக்கியத்தில் சிறுதானியங்களின் பங்கு குறித்து பழநி அரசு மருத்துவமனையின் சித்த மருத்துவர் மகேந்திரன் கூறியதாவது,

சிறுதானியங்கள் உடல்நலத்திற்கு கேடு விளைவிக்கும் நுண்கிருமிகளின் வளர்ச்சியை தடுக்கின்றன. பெருங்குடலின் செயல்பாட்டை சீராக்குகின்றன. உடல்நலத்திற்கு ஏதுவான கிருமிகளின் வளர்ச்சியை தூண்டுகின்றன. உடல் சுறுசுறுப்பிற்கு காரணமான செராட்டினின் உற்பத்திக்கு உதவுகின்றன. சிறுதானியங்களில் அதிக அளவில் காணப்படும் மெக்னீசியம், தீவிர ஆஸ்துமா மற்றும் ஒற்றை தலைவலியை தடுக்கிறது. சிறுதானியங்கள் ரத்த அழுத்தத்தை சீராக்குவதால் இதய நோய்களில் இருந்து பாதுகாப்பளிக்கின்றன. சிறுதானியங்களில் உள்ள நியாசின் (வைட்டமின் பி3) ரத்தத்தில் அதிக அளவு கொழுப்பு சேர்வதை தடுக்கிறது. அன்றாடம் சிறுதானியங்களை பயன்படுத்துவோருக்கு 2ம் வகை (இன்சுலின் சார்ந்த) சர்க்கரை நோய் வருவதில்லை. சிறுதானியங்களை அதிக அளவில் உணவு பயன்பாட்டில் சேர்க்கும்போது, ரத்தத்தில் சர்க்கரையின் அளவை கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்க உதவுகிறது. சிறுதானிய பயன்பாட்டினால் பெண்களுக்கு பித்தப்பையில் கற்கள் வருவது தடுக்கப்படுகிறது. அதிகளவு நார்ச்சத்து மிகுந்த சிறுதானியங்கள் புற்றுநோய் வருவதை தடுக்கின்றன. உடல் பருமன்

கொண்டவர்கள் சிறுதானியங்களை பயன்படுத்தும்போது, உடல் உடை சீராக குறைகிறது. எலும்பு வளர்ச்சிக்கும், சராசரி ஆரோக்கியத்திற்கும் சிறுதானியங்கள் பெரிதும் துணைபுரிகின்றன. இவ்வாறு அவர் கூறினார்.

## விவசாயிகள் குறைதீர் கூட்டம்

ராமநாதபுரம் : ராமநாதபுரம் கலெக்டர் அலுவலகத்தில் வரும் 9ம் தேதி நண்பகல் 12.30 மணிக்கு கலெக்டர் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் விவசாயிகள் கலந்து கொண்டு தங்கள் குறைகள், புகார்களை தெரிவிக்கலாம் என கலெக்டர் நடராஜன் தெரிவித்துள்ளார்.

## தொழு உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி

திருவாடானை, : தொழு உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.திருவாடானை அருகே கங்கைவிலாசம், சிறுமலைக்கோட்டை ஆகிய கிராமங்களில் விவசாயிகளுக்கு வேளாண்மை துறை முலம் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிக்க பயிற்சி முகாம் நேற்று முன்தினம் நடந்தது. முகாமில் திருவாடானை வேளாண்மை உதவி இயக்குனர் கெர்சோன், மானாவாரியில் ஊட்டமேற்றிய தொழு உரம் தயாரிப்பது குறித்தும் அதனால் மகசூல் அதிகரிக்கும் எனவும் விளக்கி பேசினார்.

மேலும் வேளாண்மை அலுவலர் பாக்கியராஜ் பேசுகையில், வேளா ண்மை விரிவாக்க மையத்தில் சான்று விதைகள், உயிர் உரங்கள், நுண் உரங் கள், பயிர்பாதுகாப்பு மருந்துகள் இருப்பில் உள்ளது. விவசாயிகள் தங்களுக்கு தேவையானவற்றை வாங்கி பயனடையலாம் என்றார்.முடிவில் வேளாண்மை துணை அலுவலர் பாண்டியன் நன்றி கூறினார்.

**விரல் வலியை போக்கும் நொச்சி**




நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் கை, கால் விரல்களில் ஏற்படும் வீக்கம், வலி, விரைப்பு தன்மையை போக்கும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். விரல்களில் விரைப்பு தன்மை இருக்கும்போது விரல்கள் வெண்மை நிறமாக மாறும்.

மூட்டுக்களில் வீக்கம், வலி ஏற்படும். ரத்தம் ஓட்டம் இல்லாத நிலையிலேயே வெண்மை நிறம் ஏற்படுகிறது. நொச்சி இலையை பயன்படுத்தி கை, கால் விரல்களில் ஏற்படும் விரைப்பு, வலியை போக்கும் மருந்து தயாரிக்கலாம்.

நொச்சி இலைகளை அரைத்து சாறு எடுக்கவும். ஒரு ஸ்பூன் சாறுடன் சம அளவு தேன் கலந்து காலையில் உணவுக்கு முன்பு சாப்பிட்டு வர விரல்களில் ஏற்படும் வலி, வீக்கம், விைரப்பு தன்மை குணமாகும். சர்க்கரை உள்ளவர்கள்

தேனுக்கு பதிலாக மிளகுப்பொடி சேர்க்கலாம். சீரகத்தை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். அரை ஸ்பூன் சீரகம், கால் ஸ்பூன் மஞ்சளுடன் பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்க வேண்டும்.

இதை வடிகட்டி காலை, மாலை வேளையில் 50 முதல் 100 மில்லி வரை குடித்துவர மூட்டுக்களில் ஏற்படும் வீக்கம், வலி, விரைப்பு மறைந்து போகும். சீரகம் அற்புதமான மருந்தாகிறது. ரத்த ஓட்டத்தை சீராக்குகிறது.

மஞ்சள் காமாலை நோய் நீக்கும் தன்மை கொண்டது. அமுக்ரா சூரணத்தை பயன்படுத்தி மருந்து விரல்களில் ஏற்படும் வலிக்கான மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் அமுக்ரா சூரணத்தில் சிறிது நீர்விட்டு கொதிக்க வைக்கவும்.

இந்த கரைசலுடன் காய்ச்சிய பால், தேன் கலந்து குடித்துவர கை, கால்கள் விரல்களில் ஏற்படும் வலி குறைய ஆரம்பிக்கும். அமுக்ரா சூரணம் உடல் தேற்றியாகவும், காய்ச்சலை தணிக்க கூடியதாகவும் விளங்குகிறது.

வலி, வீக்கத்தை போக்கும் தன்மை கொண்டது. விரல் வலிக்கான மேல்பூச்சு தைலம் தயாரிக்கலாம். 50 மில்லி விளக்கெண்ணெய், சம அளவு வேப்பெண்ணெய் சேர்த்து கொதிக்க வைக்கவும்.

இதனுடன் சீரகப் பொடியை சேர்த்து சூடுபடுத்தவும். இந்த தைலத்தை ஆறவைத்து வடிகட்டி எடுத்து வைத்துக்கொண்டு விரல்களில் மசாஜ் செய்தால் கைகளில் ஏற்படும் விரைப்பு தன்மை இல்லாமல் போகும். ரத்த ஓட்டம் சீராகும்.

வீக்கம், வலி இல்லாமல் போகும். சீரகம் ரத்த ஓட்டத்தை சீர்படுத்த கூடியது. கூந்தல் பளபளப்பாக இருப்பதற்கான மருத்துவம் குறித்து பார்க்கலாம். செம்பருத்தி பூவை அரைத்து குளிப்பதற்கு முன் கூந்தலில் தடவி சிறிது நேரம் கழித்து குளித்தால் கூந்தல் மென்மையாகவும், பளபளப்பாகவும், ஆரோக்கியமாகவும் இருக்கும்.

## குடல் புழுக்களை வெளியேற்றும் பூண்டு




நலம் தரும் நாட்டு மருத்துவத்தில், குடல் புழுக்களை வெளியேற்றும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். குடல் புழுக்கள் பிரச்னை குழந்தைகளுக்கு அதிகமாக இருக்கும். நுண்கிருமிகள், நாடா புழுக்கள் போன்றவற்றால் நோய்கள் ஏற்படும். வயிற்று புழுக்கள் ஒட்டுண்ணி வகையை சேர்ந்தவை. அதிகளவில் இனிப்பு சாப்பிடுவது, காய் கறிகளை சுத்தம் செய்யாமல் உண்பது, நகங்களை அதிகமாக வளர்ப்பது போன்றவை குடல் புழுக்கள் ஏற்பட காரணமாகிறது.

பூண்டுவை பயன்படுத்தி குடலில் உள்ள புழுக்களை வெளியேற்றும் மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: விளக்கெண்ணெய், மஞ்சள், பூண்டு. ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெய்யில் பூண்டுகளை துண்டுகளாக்கி போட்டு வதக்கவும். இதில் கால் ஸ்பூன் மஞ்சள் சேர்க்கவும். இதை இருவேளை சாப்பிடும்போது குடல் புழுக்கள் வெளியேறும். வயிறு சுத்தமாகும். செரிமானம் சீராகும். 5 வயதுக்கு உட்பட்டவர்களுக்கு விளக்கெண்ணெய் பயன்படுத்த கூடாது.

பூசணி விதையை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: பூசணி விதை, தேன். அரை ஸ்பூன் அளவுக்கு பூசணி விதை பொடி எடுக்கவும். இதனுடன் ஒரு ஸ்பூன் தேன் சேர்த்து கலந்து இரவு தூங்கப்போகும் முன்பு

சாப்பிட்டு வந்தால் குடல் புழுக்கள் வெளியேறும். பெரியவர்களுக்கு அரை ஸ்பூன் பூசணி விதை பொடியும், குழந்தைகளுக்கு கால் ஸ்பூன் அளவுக்கும் எடுக்கவும். இதை 3 நாட்கள் சாப்பிடலாம். 6 மாதத்துக்கு ஒருமுறை எடுத்துக்கொள்வது நன்மை தரும்.

பப்பாளி விதையை பயன்படுத்தி குடல் புழுக்களை வெளியேற்றும் மருந்து தயாரிக்கலாம். ஒரு ஸ்பூன் பப்பாளி விதை எடுக்கவும். சிறியவர்களுக்கு என்றால் அரை ஸ்பூன் அளவுக்கு எடுக்கவும். இதில் தேவையான அளவு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். வடிகட்டி தேன் சேர்த்து வாரம் ஒரு முறை என 4 வாரங்கள் குடித்துவர வயிற்று புழுக்கள் வெளியேறும். நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் வேப்பம் பூவை பயன்படுத்தி மருந்து தயாரிக்கலாம். அரை ஸ்பூன் நெய் காய்ந்ததும் வேப்பம் பூவை சேர்த்து வதக்கவும். இதில், நீர் சேர்த்து உப்பு போட்டு கொதிக்க வைக்கவும். வடிக்கடி மாதம் ஒருறை குடித்துவர குடலில் புழுக்கள் வராமல் இருக்கும்.

வேப்பம் பூவை முன்னோர்கள் வாரத்துக்கு ஒருமுறை உணவில் சேர்த்தார்கள். இதனால் குடல் புழுக்கள், தொற்று கிருமிகள் வராமல் தடுக்கப்பட்டது. வேப்பம் பூவில் பல்வேறு மருத்துவ குணங்கள் உள்ளன. வேப்பம் பூவை அடிக்கடி உணவில் சேர்ப்பதால் ஆரோக்கியம் கிடைக்கும். தரமற்ற, அதிகளவில் உணவை சாப்பிடுவதால் ஏற்படும் வயிற்றுவலியை குணப்படுத்தும் மருத்துவம் குறித்து பார்க்கலாம். இஞ்சியை சாறாக்கி தொப்புளில் 5 சொட்டுக்கள் விட்டு, தொப்புளை சுற்றி தடவுவதன் மூலம் வயிற்று வலி குணமாகும்.

**தலைமுடி வளர உதவும் பச்சை பயறு**



தலைமுடி கொட்டாமல் தடுப்பது, கருமையாக வளர்வது, மென்மையாக இருப்பதற்கான மருத்துவம் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்க்கலாம். தற்போது காற்று அதிகமாக வீசி வரும் நிலையில், தலைமுடியில் தூசி படிந்து முடிகொட்டும். இதை தடுக்க தலையில் அழுக்கு படியாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தலைமுடி கொட்டுவதை தடுக்கும் மருந்து தயாரிக்கலாம்.

ஒரு ஸ்பூன் நெல்லி வற்றல், ஒரு ஸ்பூன் வெந்தயம் எடுத்து நீர்விட்டு நன்றாக ஊறவைத்து அரைத்து பசையாக்கவும். இதனுடன் சிறிது பனங்கற்கண்டு சேர்த்து ஒரு டம்ளர் அளவுக்கு நீர்விட்டு கொதிக்க வைக்கவும். இதை வடிகட்டி தினமும் குடித்துவர முடி கொட்டுதல் நிற்கும். சர்க்கரை நோயாளிகள் பனங்கற்கண்டு சேர்க்காமல் குடிக்கலாம். முடி கொட்டுவதை தடுக்க ஆரோக்கியமான உணவு சாப்பிடுவது அவசியம்.

காராமணி, பச்சை பயறு ஆகியவற்றை பயன்படுத்தி முடி வளர்வதற்கான உணவு தயாரிக்கலாம். வேகவைத்த காராமணி, முளைகட்டிய பச்சை பயறு எடுத்துக்கொள்ளவும். இதனுடன் எலுமிச்சை சாறு சேர்க்கவும். சுவைக்காக உப்பு,

மிளகுப்பொடி சேர்த்து கலந்து தினமும் 50 முதல் 100 கிராம் அளவுக்கு சாப்பிட்டுவர தலைமுடி நன்றாக வளரும்.

காராமணி, பச்சை பயறு அற்புதமான மருத்துவ குணங்களை கொண்டது.

சத்தூட்டமான உணவாகிறது. உடலில் ஏற்படும் எரிச்சலை போக்கும். நொறுக்கு தீனிக்கு பதிலாக குழந்தைகளுக்கு பயறு வகைகளை கொடுத்து வந்தால் அவர்களுக்கு தேவையான சத்துக்கள் கிடைக்கும். தலைமுடியின் வேர் பலமாக இருப்பதற்கான தைலம் தயாரிக்கலாம். ஊறவைத்து அரைத்த பாதாம் பசையை எடுத்துக்கொள்ளவும். இதனுடன் ஒரு ஸ்பூன் விளக்கெண்ணெய், ஒரு ஸ்பூன் தேங்காய் எண்ணெய் சேர்த்து கலந்து தைலப்பதத்தில் காய்ச்சவும்.

இதை ஆறவைத்து தலையில் நன்றாக மசாஜ் செய்து சிறிது நேரம் கழித்து சீயக்காய் போட்டு குளித்தால் தலைமுடியின் வேர் பலம் பெறும். முடி கொட்டுவது நிற்கும். தலைமுடி நீளமாக வளரும். எண்ணெய், மசாலா சேர்ந்த உணவுகளை சாப்பிடும்போது ஏற்படும் நெஞ்செரிச்சலை குணப்படுத்தும் மருத்துவம் குறித்து பார்ப்போம். ஒரு ஸ்பூன் எலுமிச்சை சாறுடன், சிறிது சீரகம், உப்பு சேர்த்து வெந்நீர் ஊற்றி கலந்து குடித்தால் நெஞ்செரிச்சல் சரியாகும்.

## முகத்துக்கு பொலிவு தரும் ரோஜா

தோலில் ஏற்படும் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பது, சரும பராமரிப்பு குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் பார்க்கலாம். தோல் நோய்களை போக்குவதில், கஸ்தூரி மஞ்சள் அற்புதமான மருந்தாக விளங்குகிறது. இது, தோலுக்கு மென்மையை தருகிறது. தேங்காய் தோலுக்கு நன்மை தருகிறது. சோற்றுக் கற்றாழை, பாதாம் ஆகியவை தோல் நோய்களுக்கு மருந்தாகிறது. தோல் ஆரோக்கியமாக இருக்க அதிகளவில் தண்ணீர் குடிக்க வேண்டும். ஆளிவிதை பொடியுடன் சிறிது கசகசா, தேங்காய் பால் சேர்த்து நன்றாக கலக்கவும். இதை தோலில் தடவினால் தோல் வறண்டு போகாமல் ஆரோக்கியமாக இருக்கும். சருமம் பளபளப்பாக இருக்கும். கஸ்தூரி மஞ்சளை பயன்படுத்தி தோல் நோய்களுக்கான மருந்து தயாரிக்கலாம். கஸ்தூரி மஞ்சள் பொடியுடன், தேங்காய் பால் சேர்த்து கலந்து முகம் மற்றும் கை கால்களில் தடவி சிறிது நேரம் கழித்து குளித்தால் தோல் பளபளப்பாக இருக்கும். பூஞ்சை காளான் தொற்று ஏற்படுவதை தடுக்கலாம்.

சருமத்துக்கு பாதுகாப்பு தரும். வேர்குரு, கொப்புளங்கள், தோல் நோய்களுக்கு இது மருந்தாகிறது. கஸ்தூரி மஞ்சள் நோய் எதிர்ப்பு சக்தி கொண்டது. பல்வேறு மருத்துவ குணங்களை உள்ளடக்கியது.

தோல் ஆரோக்கியமாக இருக்க காய்கறி, பழங்கள் அதிகம் சாப்பிட வேண்டும். மலச்சிக்கல் ஏற்படாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். ரோஜா பூவை பயன்படுத்தி முகப்பொலிவுக்கான மருந்து தயாரிக்கலாம். ரோஜா பூவின் இதழ்களை பசையாக அரைத்து எடுக்கவும். சோற்றுக் கற்றாழையின் உள்ளே இருக்கும் சதையை எடுக்கவும். இரண்டையும் கலந்து முகத்துக்கு மேல்பூச்சாக போடவும். சிறிது நேரம் கழித்து கழுவினால் தோல் சுருக்கம் மறையும். சருமத்துக்கு பாதுகாப்பாக விளங்கும். முகத்துக்கு பொலிவை தரும். ரோஜா பூ இதழ்களை அரைத்து சாறு எடுக்கவும். பாதாம் பருப்பை தண்ணீரில் ஊறவைத்து அரைத்து எடுக்கவும். இவைகளை நன்றாக கலக்கவும். இதனுடன் தேன் சேர்த்து கலந்து முகத்தில் பூசி, சிறிது நேரம் கழித்து கழுவினால் புத்துணர்வு கிடைக்கும். சருமம் ஆரோக்கியம் பெறும். முகப்பருக்கான மேல்பூச்சு மருந்து தயாரிக்கலாம். சாதிக்காய் பொடியுடன், சந்தனப் பொடி சேர்க்கவும். இதில், எலுமிச்சை சாறு விட்டு கலந்து முகப்பரு மீது போட்டுவந்தால், பருக்கள் வடு இல்லாமல் மறையும். தோல் அழகு பெறும்.

## புற்றுநோய் வராமல் தடுக்கும் கேரட்



அல்சரை குணப்படுத்த கூடியதும், பார்வை திறனை அதிகரிக்கவல்லதும், புற்றுநோய் வராமல் தடுக்க கூடிய தன்மை கொண்டதுமான கேரட்டின் நன்மைகள் குறித்து நலம் தரும் நாட்டு மருத்துவத்தில் காணலாம். அன்றாடம் ஒரு கேரட் சாப்பிட்டு வருவது நல்லது. பல்வேறு சத்துக்களை கொண்ட கேரட் கேன்சரை தடுக்கவல்லது. இதில், மருத்துவ வேதிப்பொருட்கள் அதிகம் உள்ளன. கேரட்டை பயன்படுத்தி பார்வை திறனை அதிகரிக்கும் மருந்து தயாரிக்கலாம்.

கேரட்டை சுத்தப்படுத்தி, அதன் தோலை சீவிவிட்டு நீர் அதிகம் சேர்க்காமல் சாறு எடுக்கவும். 50 மில்லி கேரட் சாறுடன் சம அளவு அருகம்புல் சாறு கலந்து குடிக்கவும். பார்வை கோளாறு உள்ளவர்கள் கண்களை பலப்படுத்த இந்த சாறை குடித்துவந்தால் கண் நரம்புகள் பலப்படும். கண் பார்வை தெளிவாக இருக்கும். ரத்தத்தை சுத்திகரிக்கும். கேரட்டில் உள்ள கெரோட்டின் என்ற வேதிப்பொருள் கண், தோல், எலும்புகளுக்கு பலம் தருகிறது. கேரட்டை பயன்படுத்தி வயிறு உப்புசத்துக்கான மருந்து தயாரிக்கலாம். முட்டைகோசை நீர்விடாமல் அரைத்து சாறு எடுக்கவும். இதனுடன் கேரட் சாறு சேர்த்து கலந்து காலையில் வெறும் வயிற்றில் குடித்துவர வயிறு உப்புசம் சரியாகும். அல்சர் குணமாகும்.

கேரட் நோய் எதிர்ப்பு சக்தி உடையது. நச்சுக்களை வெளியேற்றி கேன்சர் வராமல் தடுக்கும். குழந்தைகள் முதல் பெரியவர் வரை அனைவரும் கேரட்டை விரும்பி சாப்பிடுவார்கள். குழந்தைகளுக்கு கேரட் சாறு கொடுக்கும்போது ஏலக்காய், பனங்கற்கண்டு சேர்த்து கொடுத்தால் பச்சை வாடை இல்லாமல் இருக்கும். குழந்தைகள் விரும்பி குடிப்பார்கள். கேரட்டை பயன்படுத்தி அல்சருக்கான மருந்து தயாரிக்கலாம். தேவையான பொருட்கள்: கேரட், பனங்கற்கண்டு, பால், தேங்காய் பால்.

பனங்கற்கண்டை நீர்விட்டு கரைத்து வடிகட்டி எடுக்கவும். இதனுடன் சிறிது காய்ச்சிய பால், கேரட் சாறு, 2 ஸ்பூன் தேங்காய் பால் சேர்த்து கலக்கவும். காலையில் சாப்பிட்ட பின்னர் இதை குடித்துவர அல்சர் குணமாகும். புற்றுநோய் வராமல் தடுக்கும். கேரட்டை பயன்படுத்தி சிராய்ப்பு காயத்துக்கான மருந்து தயாரிக்கலாம். தேங்காய் எண்ணெய்யுடன், கேரட் பசையை சேர்த்து தைல பதத்தில் காய்ச்சவும். இதை ஆறவைத்து வடிகட்டி சிராய்ப்பு, தீ காயங்கள் மீது போடும்போது காயங்கள் சீக்கிரம் குணமாகும். சிராய்பு காயங்கள் ஏற்பட்டால்

கேரட்டை அரைத்து லேசாக ஒத்தடம் கொடுத்தால் எரிச்சல் குணமாகும்.

கண்ணில் ஏற்படும் சிவப்பு தன்மை, கண் எரிச்சலுக்கான மருத்துவத்தை காணலாம். இடது கண் சிவந்திருந்தால், வலது கால் கட்டை விரலின் நகத்தில் சுண்ணாம்பை தடவி வைத்தால் கண் சிவப்பு மாறும். இதேபோல், வலது கண் சிவப்பாக இருந்தால் இடது கால் கட்டை விரல் நகத்தில் சுண்ணாம்பு பூசினால் சிவப்பு தன்மை மாறும்.

**நில சம்பங்கி**



எண்ணற்ற சிகிச்சை முறைகள் இன்றைய மருத்துவத்தில் உள்ளன. இவற்றில் மலர்களைப் பயன்படுத்தும் அரோமா தெரபி என்ற சிகிச்சை இப்போது உலகெங்கும் பிரபலமாகி வருகிறது. இந்த நறுமண சிகிச்சையில் மிகவும் முக்கியத்துவம் கொண்ட மலர்தான் நில சம்பங்கி!

நில சம்பங்கிப்பூவை நேரடியாக மருத்துவத்துக்குப் பயன்படுத்துவதை விட, அதன் எண்ணெயைப் பயன்படுத்தும் வழக்கம்தான் அதிகமாக உள்ளது. இதன் எண்ணெயை முகர்வதாலும், உடலில் தேய்த்துக் கொள்வதாலும் மருத்துவரீதியாகப் பெரும் மாற்றத்தை உணர முடியும். சிகிச்சைக்காகப் பயன்படுத்தும் அளவு சம்பங்கி மலர் எண்ணெயில் என்ன இருக்கிறது என்ற ஆவல் உங்களுக்கு எழலாம்.

Benzyl alcohol, Butric acid, Eugenol, Farnesol, Geraniol, Menthyl benzoate, Menthyl anthranite, Nerol போன்ற எண்ணற்ற மருத்துவ வேதிப்பொருட்கள் நில சம்பங்கியில் மிகுதியாக உள்ளன. இதுதான் அதன் மருத்துவ ரகசியம். இத்தனை மகத்துவம் கொண்ட நில சம்பங்கியின் மருத்துவ குணங்களைக் கொஞ்சம் விரிவாகக் காண்போம்… சம்பங்கியில் அகச்சம்பங்கி, காட்டு சம்பங்கி, சிறு சம்பங்கி, கொடி சம்பங்கி, நாக சம்பங்கி என பலவகைகள் உள்ளன.

இவற்றுள் நில சம்பங்கியையே பெரும்பாலும் சிகிச்சைக்காகப் பயன்படுத்துகிறோம். இதனால்தானோ என்னவோ, நிலசம்பங்கிதான் அதிகமாகப் பயிரிடப்படுவதும் எளிதில் கிடைப்பதுமாக இருக்கிறது. நில சம்பங்கிக்கு ஆங்கிலத்தில் Mexican tuberose என்று பெயர். Polianthes tuberose என்பது இதன் தாவரவியல் பெயர். வடமொழியில் 'ரஜனி கந்தா'என்னும் பெயரால் அழைக்கிறார்கள். இதற்கு இரவில் மலர்ந்து மணம் தரும் மலர் என்பது பொருள். இதன் காரணத்தாலேயே 'இரவு ராணி' என்றும் அழைப்பது உண்டு. கன்னடத்தில் சுகந்தராஜி என்றும் தெலுங்கில் கெல சம்பங்கி என்றும் கூறுகிறார்கள்.

**நில சம்பங்கி எண்ணெயின் மருத்துவப் பயன்கள்**

சம்பங்கி எண்ணெயை பாலியல் சார்ந்த சிகிச்சைகளுக்கு பரவலாகப் பயன்படுத்தும் வழக்கம் இருக்கிறது. நறுமணம் மிக்க மலர் என்பதால் பாலியல் விருப்பத்தைத் தூண்டக்கூடிய குணம் கொண்டதாகவும், பெண்களின் குழந்தையின்மைக்கான காரணிகளில் ஒன்றான பெண்ணுறுப்பு இறுக்கம் (Frigidity),ஆண்மைத் தன்மை குறைவு போன்றவற்றை நிவர்த்தி செய்யும் திறன் கொண்டதாகவும் நில சம்பங்கி விளங்குகிறது. சம்பங்கியின் மணம் மூளைக்குப் பரவி, உள்ளுறுப்புகளைத் தூண்டி அவற்றுக்குச் செல்லும் ரத்த ஓட்டத்தை அதிகப்படுத்தி சீரான பாலியல் உறவுக்கு உதவுகிறது. இதனால் உறுப்பு தளர்வு, இயலாமை போன்ற குறைபாடுகள் கட்டுப்படுத்தப்படுகிறது.

மேற்பூச்சாகப் பயன்படுத்துவதால் வியர்வை நாற்றம் தவிர்க்கப்பட்டு அனைவரோடும் கூச்சமின்றி பழகும் சூழ்நிலையை சம்பங்கி எண்ணெய் உருவாக்கிக் கொடுக்கிறது. சம்பங்கியின் நறுமணம் மனிதனின் மனதுக்கு

அமைதியைத் தருகிறது. மன உளைச்சல், மன அழுத்தம், கோபம், படபடப்பு, நரம்புத் தளர்ச்சி, வலிப்பு, தசைப் பிடிப்பு, குத்திருமல் மற்றும் வயிற்றுப்போக்கு ஆகியவற்றையும் தணிக்க உதவுகிறது. சம்பங்கியின் நறுமணம் நரம்புகளுக்கும், சுவாச உறுப்புகளுக்கும் சுகம் தரவல்லது.

சுவாசப்பாதை மற்றும் நரம்பு மண்டலங்களில் ஏற்பட்ட அழற்சியைத் தனித்து சீரான சுவாசத்துக்குத் துணை செய்கிறது. சம்பங்கி உடலின் ரத்த ஓட்டத்தைத் தூண்டி உடலுக்கு உஷ்ணத்தைப் பரவச் செய்கிறது. இதனால் பனிக்காலத்திலும் குளிரைத் தாங்கும் தன்மையை உடல் பெறுகிறது. உடல் வெப்பம் பெறுவதால் சுவாசப் பாதையிலும் சுவாச அறையிலும் சளி, கோழை ஆகிய துன்பம் தரும் பொருட்கள் சேராத வண்ணம் தடுக்கப்படுகிறது.

சம்பங்கி எண்ணெயை மேல் பூச்சாகப் பயன்படுத்துவதால், தொற்றுக் கிருமிகள் தாக்காத வண்ணம் சருமப் பாதுகாப்பைப் பெறுகிறது. சருமத்தின் மேல் ஏற்படும் வெடிப்புகளும் இதனால் தவிர்க்கப்படுகிறது. சம்பங்கி எண்ணெயைத் தலைக்குத் தேய்க்கும் எண்ணெயோடு சேர்த்துப் பயன்படுத்துவதால் தலைமுடி உதிர்வு, தலைமுடியின் முனைகளில் உடைதல், இளநரை போன்ற தொல்லைகள் விலகுகின்றன.

**சம்பங்கி மருந்தாகும் விதம்**

சம்பங்கிப்பூவை உலர்த்தி வைத்துக்கொண்டு தேவையான போது 5 அல்லது 6 பூக்களை நீரில் இட்டு நன்கு கொதிக்க வைத்து பனங்கற்கண்டு சேர்த்து, தினம் இரண்டு வேளைகள் உணவுக்கு முன் பருகிவருவதால் ‘கொனோரியா’ எனும் பால்வினை நோய் விரைவில் குணமாகும். சம்பங்கிப் பூக்களை நன்கு மைய அரைத்துப் பசையாக்கி நீண்ட நாட்களாக உடையாமலும் ஆறாமலும் இருக்கும் கொப்புளங்கள், கட்டிகள் இவற்றின் மேல் பற்றாகப் போட்டு வைக்க இரண்டொரு நாட்களில் கட்டிகள் பழுத்து உடைந்து சீழ் வெளியேறி சீக்கிரத்தில் குணமாகும்.

கொப்புளங்களும் வந்த வடு தெரியாமல் விலகிப் போகும்.சம்பங்கிச் செடியின் கிழங்கை வியட்நாம், கம்போடியா போன்ற நாட்டினர் தடுப்பு தரும் நோயைத்

தணிக்கவும், மலேரியாவைக் குணப்படுத்தவும் பயன்படுத்துகின்றனர். இதன் கிழங்கு தீநீராகவும் பயன்படுத்தப்படுகிறது. சம்பங்கிக் கிழங்கை அரைத்து மேற்பற்றாகப் பூசுவதன் மூலம் சீன தேசத்து மக்கள் தீக்காயங்களை குணப்படுத்தவும், சருமத்தைப் பாதிக்கும் தொற்றுக் கிருமிகளை வெளியேற்றவும், அடிபட்ட காயங்கள், கட்டி ஆகியவற்றின் வீக்கங்களைக் கரைக்கவும் பயன்படுத்துகின்றனர்.

சம்பங்கி பூக்கள் ஐந்தாறு எடுத்து நீரிலிட்டுக் காய்ச்சி சுவைக்காக தேன் அல்லது கற்கண்டு சேர்த்துப் பருகி வருவதால் சிறுநீர் தாராளமாகக் கழியும். வயிற்றில் தங்கி துன்பம் தரும் நச்சுப்பொருட்களை வெளியேற்றி நன்மை பயக்கும் குணமும் இதற்கு உண்டு. சம்பங்கிப் பூவை உலர்த்திப்பொடித்து மைய சலித்து வைத்துக் கொண்டு மேற்பூச்சாகப் பூசுவதால் வேர்க்குரு விரைவில் மறையும். அது தரும் நமைச்சலில் இருந்தும், சருமத்துக்குத் தரும் தொல்லையில் இருந்தும் விடிவு கிடைக்கும்.

சம்பங்கிச் செடியின் இலையை அரைத்துத் தலைக்குத் தடவி 20 நிமிடங்கள் கழித்து குளிப்பதால் தலையில் அரிப்பு, செதில் செதிலாக மாவு போல உதிர்தல், துர்நாற்றம் வீசுதல் போன்றவற்றுக்குக் காரணமான பொடுகுத் தொல்லையினின்று குணம் ஏற்படும். தொடர்ந்து 3 அல்லது 4 வாரங்கள் இப்படி சம்பங்கி இலையைத் தலைக்குத் தேய்த்து குளித்து வருவதால் கேசத்துக்கு பூரண ஆரோக்கியம் கிடைக்கும்.

ஐந்தாறு சம்பங்கிப் பூக்களைத் தீ நீராக்கிச் சுவைக்காகப் பனங்கற்கண்டு அல்லது தேன் சேர்த்துக் குடிப்பதால் செரிமானத்தைத் துரிதப்படுத்தி ஜீரணக் கோளாறுகளைக் கண்டிக்கும். மேலும் வெயிலில் திரிந்து வந்ததால் ஏற்பட்ட உஷ்ண ஜுரமும் தணியும். சம்பங்கிப் பூக்களை மைய அரைத்துப் பாதங்களின் புறப்பகுதியில் ஏற்படும் வெடிப்புகளின் மேல் பூசி வைக்க சில நாட்களில் வெடிப்புகள் மறைந்து பாதம் அழகு பெறுவதோடு பாத வலியும் பறந்து போகும்.

**மூலிகை மந்திரம் சப்பாத்திக்கள்ளி**



உடலுக்குக் குளிர்ச்சி தரும் இலந்தையின் சிறப்புகள் பற்றி சென்ற இதழில் பார்த்தோம். இலந்தையைப் போலவே இந்த வெயில் காலத்துக்கேற்ற மற்றும் ஓர் அற்புதக்கனிதான் சப்பாத்திக்கள்ளி. வெயிலால் ஏற்படும் களைப்பைப் போக்கக் கூடியது என்பதால் பாலை வனத்தில் பயணம் செய்கிறவர்கள் தங்கள் உணவாகவும், சோர்வை விரட்டவும் சப்பாத்திக்கள்ளியைப் பயன்படுத்துகிறார்கள். மேலும் வெயிலின் கொடுமையால் உடல் பெற்ற உஷ்ணத்தைப் போக்கக்கூடியது என்பதற்காகவும் பயன்படுத்துகிறார்கள்.

வறண்ட காலமாக இருந்தாலும் சரி... வறண்ட நிலமாக இருந்தாலும் சரி... எவ்வித சூழ்நிலைகளையும் தாங்கி வாழும் திறன் கொண்டது சப்பாத்திக்கள்ளி. முள் வகைச்செடியான சப்பாத்திக்கள்ளி மஞ்சள் நிறமுடைய பெரிய பூக்களைக் கொண்டது. வளர ஆரம்பிக்கும்போது மிகவும் மிருதுவானதாக இருக்கும் இந்த செடி, வளர வளர கெட்டிப்பட்டு விடும். சப்பாத்திக்கள்ளிக்குப் பெருமை சேர்க்கும் அதன் பழங்கள் தின்பதற்குச் சுவைமிக்கது. இரண்டு அல்லது மூன்று அங்குல நீளமுடையதாக வளரும் சப்பாத்திக்கள்ளியின் பழங்கள் பச்சை, மஞ்சள் மற்றும் சிவப்பு என மூன்று வெவ்வேறு நிறங்களுடன் அமைந்திருக்கும். சப்பாத்திக்கள்ளியை ஆங்கிலத்தில் Prickly pear cactus என்று குறிப்பிடுகிறார்கள். சப்பாத்திக்கள்ளிப் பழத்தை Tuna cactus fruit என்றும் அழைக்கிறார்கள். Opuntia

ficus indica என்பது இதன் தாவரவியல் பெயர் ஆகும். வடமொழியில் நாகபானி, காந்தாரி என்னும் பெயர் களால் குறிப்பிடுவர். தண்ணீரைச் சுத்திகரிக்கும் திறன் கொண்ட சப்பாத்திக்கள்ளி நவீன உலகில் நல்ல சுத்திகரிக்கப்பட்ட நீர் கிடைப்பது என்பது அரிதாகி வருகிறது. இதனால் சுகாதாரமற்ற நீரைக் குடிப்பதால் உலகில் அன்றாடம் ஒரு நிமிடத்துக்கு 15 பேர் இறப்பதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இத்தகைய நிலையில் சப்பாத்திக் கள்ளிச்செடி மிகவும் அவசியமான ஒன்றாகும்.

சப்பாத்திக்கள்ளியின் சதைப் பகுதியைப் பசையாக்கி மாசடைந்த நீரில் கலந்து வைத்துப் பரிசோதித்ததில் நீரில் கலந்திருந்த நச்சுகள், மாசுப் பொருட்கள், நுண்கிருமிகள் அனைத்தும் அடியில் சென்று தங்கி நீர் தெளிவானதை விஞ்ஞானிகள் கண்டிருக்கின்றனர். இதனால் 98% அளவுக்கு தண்ணீர் சுத்திகரிக்கப்பட்டது தெரியவந்துள்ளது. இதுபோலவே, சிறிதளவு சப்பாத்திக்கள்ளியை நீரில் இட்டு கொதிக்க வைத்து, அந்த நீரை சுத்திகரிக்க வேண்டிய நீருடன் கலந்து வைப்பதாலும் மாசுகள் அடியில் தங்கி சுத்தமான, பருகத்தக்க நீர் கிடைக்கும். இது மிகவும் சிக்கனமான, எளிதான நீரைச் சுத்திகரிக்கும் முறையாக விளங்குகிறது.

சப்பாத்திக்கள்ளியின் மருத்துவ குணங்கள் இலைகள் மேற்பூச்சு மருந்தாகப் பயன்படும். இதைப் பசையாக்கி மேல் பற்றாகப் பயன்படுத்துவதால் உஷ்ணம், வீக்கம் ஆகியன விலகிப் போகும். சப்பாத்திக்கள்ளியின் பழங்களை நெருப்பிலிட்டு வதக்கிக் கக்குவான் இருமலுக்குக் கொடுக்கக் குணமாகும். சப்பாத்திக்கள்ளியின் பூக்களைப் புதிதாகவோ அல்லது காய வைத்து உலர்த்தியோ வீக்கத்தை வற்றச் செய்வதற்காகவும், ரத்தத்துக்கு உறையும் தன்மையைக் கொடுப்பதற்காகவும் பயன்படுத்தலாம். இதை உள்ளுக்கு மருந்தாகப் பயன் படுத்துவதால் வயிற்றை நோகச்செய்து அடிக்கடி மலம் கழிக்க வேண்டும் என்ற Irritable Bowel Syndrome உணர்வை மாற்ற முடியும். குடற் பகுதியில் சேரும் சளித்தன்மையால் ஏற்படும் வலி குணமாகும். சப்பாத்திக்கள்ளியை அமெரிக்கப் பழங்குடியினர் உணவுப் பொருளாகத் தொடர்ச்சியாகவே பயன்படுத்துகின்றனர். Tunas என்னும் ெபயரில் இதன் பழங்கள் பெரும்பாலான கடைகளில் விற்கப் படுகின்றன. சப்பாத்திக்கள்ளியின் கிளைகளையும் மற்ற காய்கறிகளைப்போல உணவுப் பொருளாக விற்கின்றனர்.

இது சர்க்கரை நோயைத் தணிப்பதற்காகவும், மிகுந்த கொழுப்புச்சத்தைக் கரைப்பதற்காகவும், அதிக மதுவால் ஏற்பட்ட பின்விளைவு களான தலைவலி போன்ற துன்பங்களைத் தணிப்பதற்காகவும் பயன்படுத்தப்படுகிறது. மேலும் வைரஸ் நுண்கிருமிகளைக் கொல்லக்கூடியதாகவும் விளங்குகிறது.

சில ஆய்வுகளின் மூலம் சப்பாத்திக்கள்ளியால் இரண்டாம்நிலை சர்க்கரை என்கிற Type 2 Diabetes நோயாளிகளின் ரத்தத்தில் சேர்ந்திருக்கும் சர்க்கரையின் அளவைக் குறைக்க இயலும் என தெரிய வந்துள்ளது. சப்பாத்திக்கள்ளி சத்தூட்டமுள்ள உணவாக பயன்படுவதாகவும் ஆய்வுகள் கூறியிருக்கின்றன. அதிகமான நார்ச்சத்து உடையதாகவும், புத்துணர்வு தரும் ஆன்டி ஆக்ஸிடென்ட் நிறைந்துள்ளதாகவும் நவீன ஆய்வுகள் சப்பாத்திக்கள்ளி பற்றி கூறியிருக்கிறது. சப்பாத்திக்கள்ளியை முழுவதுமாகவே உணவுக்குப் பயன்படுத்தலாம். இதனுடைய இலைப்பகுதி, பூக்கள், தண்டுப்பகுதி மற்றும் பழங்கள் ஆகியனவற்றைச் சமைத்தோ அல்லது சாறு பிழிந்தோ உள்ளுக்கு உணவாகவும் மருந்தாகவும் பயன்படுத்தலாம். இதை உணவாகப் பயன்படுத்துவதால் கொழுப்புச்சத்து குறைவது மட்டுமின்றி ஜீரண உறுப்புகள் பலம் பெற்று சீராக இயங்க வழியேற்படுகிறது. சில வகைப் புற்றுநோய்கள் வராத வண்ணம் தடைப்படுத்தும் வலிமையும் சப்பாத்திக்கள்ளிக்கு உண்டு. மேலும் மறதி நோயான அல்ஸைமர் நோய்க்கு மருந்தாகவும், அல்ஸைமர் வராமல் தடுக்கும் வல்லமை கொண்டதாகவும் சப்பாத்திக்கள்ளி மருந்தாகி பயன் தருகிறது. வைட்டமின் சி மற்றும் வைட்டமின் பி, மெக்னீசியம், பொட்டாசியம், கால்சியம் என பல்வேறு சத்துகளை உள்ளடக்கி மானுடர் ஆரோக்கியத்துக்கு மகத்தான உதவி செய்வதாக உள்ளது. சப்பாத்திக்கள்ளி தரும் ஆரோக்கியம் ஒரு முறை சப்பாத்திக்கள்ளியை உணவில் சேர்த்துக் கொள்வதால் நமக்கு ஒரு நாளைக்குத் தேவையான வைட்டமின் சி சத்தில் மூன்றில் ஒரு பங்கு அளவுக்கு கிடைக்கப் பெறுகிறோம்.

அஸ்கார்பிக் அமிலம் என்றழைக்கப்படும் இது நோய் எதிர்ப்பு சக்திக்கு மிகவும் இன்றியமையாதது. மேலும், ரத்தத்தில் வெள்ளை அணுக்கள் உற்பத்தி ஆவதற்கும் துணை நிற்கிறது. சப்பாத்திக்கள்ளியில் உள்ள கால்சியம் என்கிற சுண்ணாம்புச்சத்தும் அதிகம் இருப்பதால் எலும்புகளின் வளர்ச்சிக்கு மிகவும் பயனுள்ளதாக அமைகிறது. சப்பாத்திக்கள்ளியில் உள்ள நார்ச்சத்து சீரான செரிமானத்துக்கும், மலச்சிக்கலை நீக்கவும் வகை செய்கிறது. வயிறு உப்புசம்

இல்லாமல் பாதுகாத்துக் கொள்ள வும் இயலுகிறது. இதனால் குடல் புண், மலக்குடல் புற்று தடுக்கப்படுகிறது. சப்பாத்திக்கள்ளியிலிருந்து பெறப் படும் நார்ச்சத்து உடலில் சேர்ந்துள்ள கெட்ட கொழுப்புச்சத்தைக் கரைத்து வெளியேற்ற வழி செய்கிறது. இதிலுள்ள பொட்டாசியம் சத்து ரத்த ஓட்டத்தை சீர் செய்து ரத்த அழுத்தம் அதிகம் ஆகாமல் பாதுகாக்கிறது. இதனால் ரத்த நாளங்களின் அடைப்பும் மாரடைப்பு அபாயமும் தடுக்கப்படுகிறது. சப்பாத்திக்கள்ளியில் அதிக அளவிலான Flavonoid, Polyphenol ஆகிய வேதிப்பொருட்கள் அடங்கியுள்ளன. இவை உடலில் தன்னிச்சையாக செயல்பட்டு புற்றுநோய் உண்டாகக் காரணமாகும் நச்சுகளை வெளியேற்றும் பணியில் பெரும்பங்கு வகிக்கின்றன. இதனால் புற்று நோய் தவிர்க்கப்படுகிறது. மேலும், இவை சருமத்தினுடைய ஆரோக்கியத்துக்கும், இளமையில் ஏற்படும் முதுமையை தடுப்பதற்கும், கண்களின் பார்வை தெளிவு படுவதற்கும், மூளையின் செயல்பாடுகள் மேம்படுவதற்கும், மறதி நோய் ஏற்படாமல் தடுப்பதற்கும் உதவுகின்றன.

**சப்பாத்திக்கள்ளி மருந்தாகும் விதம்**

* சப்பாத்திக்கள்ளியை பசையாக்கி மேற்பற்றாகப் போட்டு வைப்பதால் மூட்டு வலி, வீக்கம் ஆகியன குணமாகும். காது வலி, பல் வலி ஆகியவற்றுக்கும் இது பயனுள்ளதாய் விளங்கும்.

* சப்பாத்திக்கள்ளியை நன்கு பசையாக்கி சிறிது விளக்கெண்ணெய் விட்டு வதக்கி வீக்கம், வலி கண்ட இடத்தில் மேற்பூச்சாகப் பூசி வைக்க விரைவில் வீக்கம் வற்றும். வலியும் விலகும்.

* சப்பாத்திக்கள்ளியை முட்கள் நீக்கி சுத்திகரித்து பசையாக்கி 20 கிராம் அளவில் தினமும் இருவேளை சாப்பிட்டு வர உஷ்ணமாக மலம் வெளியேறுதல் மற்றும் மாதவிலக்கு நிற்கும் காலத்தில் ஏற்படும் பல்வேறு தொல்லைகள் இல்லாமல் போகும்.

* சப்பாத்திக்கள்ளியை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வதால் அல்லது தீநீராகச் செய்து குடிப்பதால் சர்க்கரை நோய், உயர் ரத்த அழுத்தம், சிறுநீரகம் மற்றும் சிறுநீர்த்தாரை நோய்கள் பலவும் கட்டுப்படும்.

* சப்பாத்திக்கள்ளியை நெருப்பிலிட்டு சுட்டு உள்ளுக்கு சாப்பிடுவதால் குடல் புண் எனப்படும் அல்சர் விரைவில் குணமாகும்.

* சப்பாத்திக்கள்ளியின் சதைப் பகுதியை வதக்கிச் சிறு பிள்ளைகளுக்கு உண்ணக் கொடுப்பதால் சளி மற்றும் ஆஸ்துமா குணமாகும்.

* பாம்பின் விஷத்தையும் தேள், பூரான், எலி, நாய் போன்றவைகளின் கடி விஷத்தையும் போக்கும் மருந்தாக சப்பாத்திக் கள்ளி விளங்குகிறது என்பதும் உண்மை.

இதன் பகுதி சற்று பூமியில் பட்டாலே அங்கு விரைவில் வேர் ஊன்றித் தன்னை விருத்தி செய்து கொள்ளும் தன்மை உடையது சப்பாத்திக்கள்ளி. அதனாலேயே இது சீக்கிரத்தில் பல்கிப் ெபருகிவிடும். இதன் இலைப் பகுதி மற்றும் தண்டுப்பகுதிகளில் கொத்துக் கொத்தாக மிகவும் அடர்ந்த, கூரிய முட்கள் அமைந்துள்ளதால் இதை அழித்து நிலத்தைச் சீர் செய்வது மிகவும் கடினமானதாகும். அதனால் நெருப்பிட்டுக் கொளுத்தியே இதை அழிக்க இயலும். பாம்புகள் மற்றும் விஷப்பூச்சிகள் உறைவிடமாக இதன் புதர் விளங்கும் என்பதால் எச்சரிக்கையாகக் கையாள்வது அவசியம்.

## இன்றைய வேளாண் செய்திகள்

**கம்பி கூண்டுகளுக்கு பதிலாக கோழிகளை அடைக்க மாற்று வழிகளை யோசியுங்கள் மத்திய அரசுக்கு சுப்ரீம் கோர்ட்டு அறிவுறுத்தல்**



புதுடெல்லி,

பண்ணைகளில் வளர்க்கப்படும் கோழிகளை அடைக்க பெரும்பாலும் கம்பி கூண்டுகளே பயன்படுத்தப்படுகின்றன. இவ்வாறு அடைக்கப்படும் கோழிகள் நகர முடியாமலும், சிறகை விரிக்க முடியாமலும் பெரும் துன்பத்துக்கு ஆளாகின்றன. இந்த கொடூரத்தை எதிர்த்து விலங்குகள் நலவாரியம் சார்பில் சுப்ரீம் கோர்ட்டில் வழக்கு தொடரப்பட்டு உள்ளது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி டி.எஸ்.தாக்குர் தலைமையிலான அமர்வு முன்பு நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது, முட்டையிடும் கோழிகளுக்கு பண்ணைகளில் நேரும் கொடூரம் குறித்து நீதிபதிகள் வேதனை தெரிவித்தனர்.

பின்னர் அவர்கள், கோழிகளை அடைக்க கம்பி கூண்டுகளுக்கு பதிலாக மாற்று வழிகளை சம்பந்தப்பட்ட துறையினருடன் அடுத்த மாதம் (செப்டம்பர்) கலந்து ஆலோசிக்குமாறு மத்திய சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை அமைச்சகத்தை கேட்டுக்கொண்டனர்.

இதற்கு பதிலளித்த மத்திய அரசின் கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல் மணிந்தர்சிங், இது தொடர்பான சட்டங்களை பரிசீலிப்பதாகவும், இதற்கு சில காலம் பிடிக்கும் எனவும் கூறினார்.

பின்னர், விலங்குகள் நலவாரியம், பிராணிகள் நல ஆர்வலர்கள், பண்ணை முதலாளிகள் உள்ளிட்ட ஆர்வலர்களும் இந்த விவகாரம் தொடர்பாக ஆய்வு செய்யுமாறு கேட்டுக் கொண்ட நீதிபதிகள், இந்த பிரச்சினை தொடர்பாக நாடு முழுவதும் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குகள் அனைத்தையும் டெல்லி ஐகோர்ட்டுக்கு மாற்றி உத்தரவிட்டனர்.

## தோவாளை மார்க்கெட்டில் பிச்சி பூ விலை ரூ.125 உயர்வு ஒரு கிலோ ரூ.300–க்கு விற்பனை



நாகர்கோவில்,

தோவாளை பூ மார்க்கெட்டில் நேற்று பிச்சி பூ விலை ரூ.125 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.300–க்கு விற்பனை செய்யப்பட்டது.

பூ மார்க்கெட்

நாகர்கோவில் அருகே உள்ள தோவாளையில் பூ மார்க்கெட் உள்ளது. இங்கு தினமும் குமரி மாவட்டத்தில் இருந்து மட்டுமின்றி நெல்லை, மதுரை உள்பட பல இடங்களில் இருந்தும் பூக்களை விற்பனை செய்வதற்காக விவசாயிகள் கொண்டுவருகிறார்கள்.

இதற்காக டெம்போ, மினிடெம்போ, பஸ் உள்பட வாகனங்களை பயன்படுத்துகிறார்கள். தினமும் அதிகாலையிலேயே மார்க்கெட்டிற்கு பூக்கள் வந்துவிடுவதால், அப்போதில் இருந்தே வியாபாரமும் நடைபெற தொடங்கிவிடும். இங்கு பூக்கள் சில்லறையாகவும், மொத்தமாகவும் விற்பனை செய்யப்படுகிறது.

பிச்சி விலை உயர்வு

இந்நிலையில் நேற்று முன்தினம் ஒரு கிலோ ரூ.175–க்கு விற்பனை செய்யப்பட்ட பிச்சி பூ, நேற்று விலை ரூ.125 உயர்ந்தது. இதனால் ஒரு கிலோ ரூ.300–க்கு விற்பனை செய்யப்பட்டது. பிச்சி பூவின் விலை உயர்வு குறித்து பூ வியாபாரி விஸ்வநாதன் கூறுகையில் " இன்று (நேற்று) ஆடி வெள்ளிக்கிழமை என்பதால் பிச்சி பூக்களை வியாபாரிகள் மார்க்கெட்டிற்கு வந்த உடனே ஏலம் எடுத்து சென்றனர். இதனால் தான் விலை உயர்ந்தது" என்று கூறினார்.

விவரம்

மேலும், மற்ற பூக்களின் விலை விவரம் ஒரு கிலோவிற்கு வருமாறு:– கனகாம்பரம் ரூ.350–க்கும், முல்லை ரூ.250–க்கும், மல்லிகை ரூ.200–க்கும், ஸ்டெம்புரோஸ் ரூ.180–க்கும், பட்டன்ரோஸ் ரூ.150–க்கும், வெள்ளை சிவந்தி ரூ.120–க்கும், மருக்கொழுந்து ரூ.120–க்கும், அரளி ரூ.120–க்கும், சிவந்தி ரூ.100–க்கும், கொழுந்து ரூ.80–க்கும், சம்பங்கி ரூ.70–க்கும், கேந்தி ரூ.50–க்கும், மஞ்சள் கேந்தி ரூ.50–க்கும், வாடாமல்லி ரூ.40–க்கும், மாம்பழ கேந்தி ரூ.35–க்கும், கோழிப்பூ

ரூ.30–க்கும், துளசி ரூ.20–க்கும், பச்சை ரூ.5–க்கும், தாமரை (100 எண்ணம்) ரூ.200–க்கும், ரோஜா (100 எண்ணம்) ரூ.30–க்கும் விற்பனை செய்யப்பட்டது.